கொள்முதலுக்கு விதித்திருக்கின்ற விலை தகுமான விலையாக இருக்கிறது. உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு விவசாயப் பெருமக்கள் வெற்றிகரமாக ஒத்துழைக்க வேண்டும். சிலர் அரசியல் நோக்கத்தோடு, கொள்முதல் விலையைக் கூட்ட வேண்டும். விவசாயிகள் கொள்முதலுக்கு நெல் போடக்கூடாது என்று சொல்கிறார்கள். இப்படிச் சொல்வது தவறு. தங்களுக்குத் தேவையானது போக மீதமுள்ளதை அரசாங்கத்திற்குத் தந்து உதவ விரும்புகிறார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் பஞ்ச நிவாரண வேலையாக ரேஷன் கடைகளைத் திறந்து அரிசி வழங்க வேண்டும். அப்படி அரிசி கிடைக்காவிட்டாலும், கோதுமை, மைதா போன்ற உணவுப்பொருள்களை வழங்க வேண்டும். மத்திய அரசு நமக்கு அதிகமான கோதுமையைத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது கோதுமை ஓரளவுக்கு தகுந்த உதவியாக இருக்கும். குறிப்பாக ராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பஞ்ச நிலைமைக்காக 40 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதை ரெகுலர் ஒர்க்கில் போடுவதாகத் தெரிகிறது. இதை ஸ்பெஷல் ஒர்க்கில் போட்டு, அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு வசதி செய்துகொடுக்க வேண்டும்.

மற்றபடி ரைஸ் மில்களுக்கு லைசென்சு வழங்குகிறபோது பொதுமக்களுக்குத் தெரிகிறபடி, பக்கத்தில் உள்ள ரைஸ் மில்காரர்களுக்குத் தெரிகிறபடி வழங்க வேண்டும். குறிப்பாக கமுதியில் ஏற்கனவே ரைஸ்மில்கள் இருக்கின்றன. மேலும் பக்கத்தில் உள்ள ராஜாஜி ஹாஸ்டல் கைக்குத்தல் அரிசி சங்கம் கடுமையாய் எதிர்க்கிறார்கள். அப்படி இருக்க, இப்போது புதிதாக ஒரு ரைஸ் மில்லுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதை மறுபரிசீலனை செய்து அதை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக திறமையானதொரு உணவுக்கொள்கையை நமது சர்க்கார் பின்பற்றி வருவதற்காகப் பாராட்டி எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

மாற்றுத்தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :—பேரவையின் 6 (1) விதியின் கீழ் இப்பேரவையின் மாற்றுத் தலைவர்களாக கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்களை நான் நியமிக்கிறேன்:—

1. திரு. பெ. சௌந்திரபாண்டியன்.
2. திரு. எஸ். ஆறுமுகம்.
3. திரு. நா. வீராசாமி.
4. திரு. கா. ராமமூர்த்தி.

6. 1969-70-ம் ஆண்டிற்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

***திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, இன்றைய மானியத்தின் மீது எங்கள் கட்சிக்காரர் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பால்பண்ணைத் துறையில் மாதவரம் பண்ணை மூலமாக லாபம் வருகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை நாங்கள் எல்லாம் வரவேற்கிறோம். இருந்தாலும் சில பண்ணைகள் சரியாக நடைபெறவில்லை. பால் பவுடரைக் கலந்து கொடுப்பதான புகார்கள் வருகின்றன. ஆகவே அமைச்சர் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து நட